# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்.
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2017

| தரம் : 10 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம் : 1.00 மணி |
|---|---|---|
| | பெயர் / சுட்டெண் .................................................... | |

## பகுதி - I

- **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. "கொற்றத்**தார்** குரிசில் இவர் ஆர்?" இங்கு தார் என்பது
    1) வெற்றி  2) மாலை
    3) குளம்  4) தலைவன்

02. "போரெடுத்து வரும் **மதன்** முன்செல..............". இங்கு மதன் என்பது
    1) மன்மதன்  2) படைவீரன்
    3) மதி  4) கரும்பு

03. மாய்ந்திடாத நிறைந்த விருப்பமே **கதிகள்** யாவும் தருமென ஓர்ந்திடார். இங்கு கதி என்பதன் எதிர்க்கருத்து
    1) தெளிவு  2) கடுகதி
    3) நிர்க்கதி  4) வீடுபேறு

04. கம்பியூட்டருடன் ஓர் **இணக்கம்** ஏற்பட்டது. இங்கு இணக்கம் என்பதன் எதிர்க்கருத்து
    1) சுணக்கம்  2) ஒற்றுமை
    3) பிரச்சினை  4) பிணக்கம்

05. "**போதம்** மூன்றும் வலஞ்செயும் நாடு." போதம் மூன்றும் என்பதனுள் அடங்காதது
    1) பிறப்பு  2) வாழ்வு
    3) இறப்பு  4) மறுப்பு

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

06. சினிமாத் துறையில் எடிற்றிங் (Editing) என்பது
    1) ஒளிப்பதிவு  2) ஒலிப்பதிவு
    3) படத்தொகுப்பு  4) படவிநியோகம்

07. வரிசை, அழகு, ஆபரணம் என்னும் பலபொருள் தரும் ஒரு சொல்
    1) அணி  2) கா
    3) கலம்  4) நகை

08. பெண் யானை பிடி எனப்படுவது போல, பெண் மான்
    1) கலை  2) பிணை
    3) பிணா  4) வடவை

09. தோடம்பழத்தின் உள்ளீடு சுளை என்பது போல, கற்றாளையின் உள்ளீடு
    1) சோறு  2) பருப்பு
    3) முத்து  4) மணி

10. அடிதோறும் செய்யுட் சீர்களின் இரண்டாவது எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது
    1) எதுகை  2) மோனை
    3) சிலேடை  4) மடக்கு

11. கண்ணறுதல் என்ற மரபுத்தொடரின் பொருள்
1) எதிர்ப்படுதல் 2) எதிர்நிற்றல்
3) இரங்குதல் 4) அன்பு குறைதல்

12. நல்லறிவு புகட்டுதல் என்னும் பொருள் தரும் மரபுத்தொடர்
1) செவியறிவுறுத்துதல் 2) செவிமடுத்தல்.
3) செவி சாய்த்தல் 4) செவி கொடுத்தல்

13. வீண்செலவு செய்பவன்
1) உதவாக்கரை 2) கருமி
3) ஊதாரி 4) பேதை

14. பின்வருவனவற்றுள் பாரசீகச் சொல்லாக அமைவது
1) சுருங்கை 2) இமாம்
3) திவான் 4) துட்டு

15. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற பழமொழிக்கு நிகரான பழமொழி
1) கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா?
2) அலைமோதும் போதே தலை முழுகு.
3) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
4) வாழும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும்.

16. அறுபதாம் ஆண்டின் நிறைவில் எடுக்கப்படும் விழா
1) அமுதவிழா 2) வைரவிழா
3) பொன்விழா 4) வெள்ளிவிழா

17. ஒத்த பொருள் உள்ள இரு சொற்களால் அமைந்த இணைமொழி
1) ஈடும் எடுப்பும் 2) மேடு பள்ளம்
3) கொஞ்சிக்குலாவி 4) ஆதிஅந்தம்

18. ஒரு நூலை அச்சிட்டு வெளியிடுவோர் அந்நூலைப் பற்றிக் கூறும் உரை
1) பதிப்புரை 2) அணிந்துரை
3) முகவுரை 4) நூன்முகம்

19. அபூர்வமாக நடைபெறும் நிகழ்வைக் குறிக்கப் பொருத்தமான உவமைத் தொடர்
1) யானை முன் பூனை போல 2) கல்லில் நார் உரிப்பது போல
3) கரடி கார்த்திகைப் பிறை கண்டது போல 4) உள்ளங்கை நெல்லிக் கனி போல

20. மடுவம் என்பது எப் பிரதேச வழக்கு
1) வடக்கு 2) கிழக்கு
3) மலையகம் 4) மேற்கு

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

21. பின்வருவனவற்றுள் எதிர்மறை இடைநிலைகள்
1) த், ட் 2) கின்று, கிறு
3) இல், மாட்டு 4) ப், வ்

22. வெள்ளியால் செய்த கொலுசு. இங்கு ஆல் உருபு உணர்த்தும் பொருள்
1) மூலம் 2) காரணம்
3) கருவி 4) அடைமொழி

The National e-learning Portal for the General Education

23. யூதாஸ் இயேசுவின் கூடவேயிருந்தானாயினும் அவரைக் காட்டிக் கொடுத்தான். இவ் வாக்கியம்
   1) தனி வாக்கியம்  2) கலப்பு வாக்கியம்
   3) கூட்டு வாக்கியம்  4) மெய்ப்பாட்டு வாக்கியம்

24. **"இரு கண்ணும் சிவந்தது."** இது எவ்வகை வழுவமைதி?
   1) எண் வழுவமைதி  2) இட வழுவமைதி
   3) பால் வழுவமைதி  4) கால வழுவமைதி

25. கருணையுள்ள உள்ளம். இங்கு கருணையுள்ள என்பது
   1) தனிப்பெயரடை  2) கூட்டுப்பெயரடை
   3) தனிவினையடை  4) கூட்டுவினையடை

26. குளக்கரை என்பது
   1) வினைத்தொகை  2) பண்புத்தொகை
   3) உவமைத்தொகை  4) வேற்றுமைத்தொகை

27. ககரமெய் வேறுபட்டு ஒலிக்கும் சொல்
   1) கதவு  2) கற்பு
   3) கப்பல்  4) தங்கம்

28. அகராதி ஒழுங்கில் அமைந்த சொற்றொகுதி
   1) கிரி, குதிரை, கேடு, கோயில்  2) ஆலை, காலை, வேலை, சாலை
   3) நகரம், நீலம், நொண்டி, நாடு  4) சாடி, சீப்பு, செம்பு, சூரியன்

- **பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியைத் தெரிவு செய்க.**

29. 1) அகப்புணர்ச்சி :- உண்டான், பாடினான், கிளியை
   2) புறப்புணர்ச்சி :- பூங்கொடி, வேலெறிந்தான், மார்கழித்திங்கள்
   3) இயல்புப்புணர்ச்சி :- மண்ணரிப்பு, கடலலை, கலைவிழா
   4) கெடுதல் விகாரப்புணர்ச்சி :- மரவேர், வட்டநிலா, நீல வானம்

30. 1) கூட்டுப்பெயர் :- கடற்கரை, நீரேரி, தொலைக்காட்சி
   2) ஆக்கப்பெயர் :- முதலாளி, பெண்ணியம். சமூகவியல்
   3) வினையாலணையும் பெயர் :- விழுந்தவனை, வந்தவன், நடந்தவனை
   4) காரணப்பெயர் :- பறவை, மண்வெட்டி, நாற்காலி

- **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்கில் அரசாங்கம் விவசாயிகளுக்கு ................................ வழங்கத் தீர்மானித்துள்ளது.
   1) நிவாரணம்  2) மானியம்
   3) நன்கொடை  4) குத்தகை

32. போதைப் பொருட்களின் பாவனையை ஒழிக்க வேண்டி மக்கள் ........................................ மேற்கொண்டனர்.
   1) பிரசாரம்  2) பிரகடனம்
   3) ஆர்ப்பாட்டம்  4) அறிக்கை

33. வல்லரசுகள் அணுவாயுதத் தடை ஒப்பந்தத்திற்கு ...................................... தெரிவித்தன.
   1) இணக்கம்  2) பிணக்கம்
   3) தயக்கம்  4) கருணை

34. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு நீதிபதி குறித்த நாளில் நீதிமன்றத்திற்கு சமுகமளிக்கும்படி ............................................................ விடுத்தார்.

1) அழைப்பாணை
2) பிடியாணை
3) ஆட்கொணர்வுமனு
4) கோரிக்கை

- **வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

35. வெள்ளம் போல மாணவர் கூட்டம் ..........................................

1) திரண்டது
2) திரண்டனர்
3) திரண்டார்கள்
4) திரண்டன

36. அவன் என்னிடம் வந்தாலன்றி நான் பணம் ................................................

1) கொடுப்பேன்
2) கொடுத்தேன்
3) கொடேன்
4) கொடுப்பதில்லை

- **தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

**தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்க**
**கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளை கண்விழித்து நோக்க**
**தெண்டிரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்**
**வண்டுகள் இனிதுபாட மருதம் வீற்றிருக்கு மாதோ**

37. இப் பாடலில் சிறப்பிக்கப்படும் நிலம்

1) வயலும் வயல் சார்ந்த நிலம்.
2) மலையும் மலை சார்ந்த நிலம்.
3) காடும் காடு சார்ந்த நிலம்
4) கடலும் கடல் சார்ந்த நிலம்

38. மயில்கள் நடனம் ஆட விளக்குகள் ஏந்தி நிற்பவை

1) குவளை
2) தாமரை
3) மேகம்
4) வண்டுகள்

39. இப்பாடல் கையாளப்பட்டுள்ள அணி

1) உருவகம்
2) உயர்வு நவிற்சி
3) தற்குறிப்பேற்றம்
4) சிலேடை

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ) மலைகளைக் குடைந்தும் கற்களைச் செதுக்கி அடுக்கியும் கட்டும் அக்கட்டுமானப் பணி மிகக் கடினமானது.
ஆ) இவர்களுள் முதன்முதலில் கற்கோவில் கட்டும் பணியைத் தொடக்கி வைத்தவர்கள் பல்லவர்களே.
இ) அக் கடினமான கட்டுமானப் பணியில் பிற்காலச் சோழர்கள் பெருஞ்சாதனை படைத்தார்கள்.
ஈ) தமிழ்நாட்டில் சேரர், சோழர், பாண்டியர், பல்லவர் முதலான பல அரச குலத்தவர்கள் ஆட்சி நடத்தியிருக்கிறார்கள்.
உ) தஞ்சைப் பெருங்கோயில் அச் சாதனைகளுள் தலையாயது.

1) உ, ஈ, இ, ஆ, அ
2) ஈ, ஆ, அ, இ, உ
3) இ, உ, ஆ, ஈ, அ
4) அ, ஈ, ஆ, உ, இ

(40 x 1 = 40 புள்ளிகள்)

## மாகாணக் கல்வித்திணைக்களம்
## வடக்கு மாகாணம்.
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2017

| தரம் : 10 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம் : 2.00 மணி |
|---|---|---|
| | பெயர் / சுட்டெண் ................................................ | |

### பகுதி - II

**01. சுருக்கமான விடை தருக.**

1) பின்வரும் தொடரைச் சந்திபிரித்து எழுதுக.
அறந்தானே யென்கின்ற வயனின்றா டனை நோக்கி

2) உடு என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்க வகையில் வாக்கியம் அமைக்குக.

3) பின்வருவனவற்றுள் சுருக்கம் எழுதும் போது தவிர்க்க வேண்டியவை.
வர்ணனைகள், அணிகள், பயன்படுத்தல். பிரதான கருத்தை இனங்காணல், குறிப்பெடுத்தல், கூறியது கூறல்

4) நேர்முக வர்ணனையாளருக்கு இருக்க வேண்டிய பண்புகள் இரண்டு தருக.

5) பின்வரும் வாக்கியத்தை மயக்கம் நீக்கி எழுதுக.
நவீனமயப்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான நூலகம் அதிக பயனளிப்பதாக இருந்தது.

6) பின்வரும் பேச்சு வழக்குத் தொடரை எழுத்து வழக்குத் தொடராக மாற்றி எழுதுக.
"ஐயா சாப்பிட்டு முடிஞ்சு ஆறுதலா இருக்கேக்க கேட்க வேணும்."

7) கபிலர் பாரியைப் புகழ்ந்து பாடினார்.
கபிலர் பல பரிசுகள் பெற்றார்.
கபிலர் மகிழச்சியோடு வீட்டுக்குச் சென்றார்.

மேற்படி தனிவாக்கியங்களைக் கூட்டு வாக்கியமாக்குக.

8) கழியும் பிழை பொருட் டள்ளி நன்னூலாங் கடலினுண்டு. இதில் இடம்பெற்றுள்ள அணியை விளக்குக.

9) பின்வருவனவற்றுள் கருத்தில் வேறுபடும் தொடர் யாது?
கிட்டத்தட்ட, கிட்டமுட்ட, திட்டவட்டமாக, ஏறத்தாழ

10) "எடுப்பார் கைப்பிள்ளை" என்ற மரபுத்தொடரின் பொருள் யாது?

(10 x 2 = 20 புள்ளிகள்)

**02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

1. *வாசிப்புப் பழக்கம் என்பது இன்று அருகி வருகின்றது. இலத்திரனியல் ஊடகங்களின் மிகை நுகர்வு வாசிப்புப் பழக்கத்தை வீழ்ச்சியடையச் செய்துள்ளது. ஆனால் ஆழமான வாசிப்புத்தான் அறிவைத் தூண்டவல்லதும் மனிதனைப் பூரணமாக்குவதுமாகும் என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் ஒரு விளக்கக் கட்டுரை.*

2. *எந்த நாட்டிலும் சிறுவர் நலன்கள் பேணப்பட வேண்டும். அவர்களுக்கான உரிமைகளை மறுத்தல் கூடாது. நாளைய தலைவர்கள் அவர்களே. எனவே சிறுவர்களுக்கு கல்வி, விளையாட்டு முதலான சகல உரிமைகளையும் வழங்கி அவர்களை உருவாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் ஒரு மேடைப் பேச்சு.*

3. *தொலைக்காட்சி பொழுது போக்குச்சாதனம் மட்டுமன்று. அது மொழி, பண்பாடு, கலை ஆகியவற்றை வளர்த்தெடுக்கும் சாதனமாகவும் விளங்குகின்றது என்ற கருத்துடையவர்க்கும் தொலைக்காட்சியினால் சமூகப் பிறழ்வுக்கும் காரணியாக அமைகிறது என்ற கருத்துடைய பிறிதொருவருக்குமிடையே நடைபெறும் உரையாடல்.*

4. *குமார் படிப்பில் திறமையானவன் படித்து நல்ல நிலைக்கு வரவேண்டும் என்ற ஆர்வம் கொண்டவன். எனினும் நண்பர்களின் போதனைகளால் வெளிநாட்டுக்குச் செல்வதற்கான மோகம் அவனைப் பற்றிக் கொண்டது. படிப்பில் அவனது கவனம் குறைந்தது. எண்ணியபடி வெளிநாடு சென்றான். ஆனால், அங்கு சென்றதன் பின்தான் தாய் நாட்டின் அருமை புரிந்தது. அங்கு சென்ற இளைஞர் தன்னைப் போலவே அவஸ்தைப்படுவதைக் கண்டு கொண்டான். அவன் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்தான்...... என்ற கருவை மையமாகக் கொண்ட சிறுகதை.*

*(25 புள்ளிகள்)*

**03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)**

*பரந்து விரிந்த உலகம் சுருங்கி இன்று ஒரு குவலயக் கிராமம் ஆகக் காட்சியளிக்கிறது. கற்றது கையளவு கல்லாதது உலகளவு என்கிறோம். ஆனால் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் இன்று உலகம் கையளவு தகட்டுக்குள் அடக்கப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்ப மற்றும் கணினி பொறித் தொழில்நுட்பம் இவற்றின் சங்கமத்தால் உருவாகிய இணையம் இன்று தகவல் பரிமாற்றத்தில் ஒரு பெரும் புரட்சியையே ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. கணினி மூலம் நமக்கு வேண்டிய தகவல்களை நாமே உலகம் முழுவதும் சென்று தேடி எடுத்துக் கொள்ள முடிகிறது. துலக்கத்துலக்கக் கேட்டதெல்லாம் கொண்டு வந்து தரும் அலாவுதீனின் அற்புத விளக்காக இன்றைய உலகில் இணையம் செயற்படுகிறது. இணையம் பற்றிக் குறிப்பிடும் போதே உலகளாவிய வலைப்பின்னல் என்ற தொடரும் சேர்ந்தே குறிப்பிடப்படுகின்றது. இணையத்தைச் சுற்றி வரும் முறையே வலை எனப்படுகிறது. வலை நோக்கர் (Browser) என்ற சிறப்பு ஆணைத் தொடர் மூலம் வலையில் உள்ள கடலளவு தகவல்களைப் பெறமுடிகிறது. இணையம் முப்பது ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கப்பட்டது என்றாலும் அண்மையில்தான் அதன் பயன்பாடு பெருகி மனித வாழ்வில் ஒரு பெரும் புரட்சியையே உருவாகியுள்ளது. தொடக்கத்தில் இணையம் அஞ்சல் செய்திகள் அனுப்புவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டது. நாளடைவில் இணையத்தின் பயன்பாடு சிறுகச் சிறுகப் பெருகி இன்று மின்னஞ்சல். மின்வணிகம், மின்னிசை, மின் அரட்டை, மின் நூலகம் போன்ற பல வகைகளில் பயன்பட்டு வருகிறது. இணையப் பயனாளர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே போகிறது. இனி வருங்காலத்தில் இது மேலும் அதிகரித்துச் செல்லும் இந்நிலையில் இணையத்தைப் பெரும்பாலும் பயன்படுத்துகிறவர்கள் யார்? எத்தகைய தகவல்களுக்காக இணையத்தை நாடுகின்றனர்? இணையத்தின் வாயிலாகப் பெறப்படும் பயன்கள் யாவை? என்பன குறித்து ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.*

*(10 புள்ளிகள்)*

**04. பின்வரும் உரைப் பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

*சுய கட்டுப்பாட்டினைச் சிறு பராயத்திலிருந்தே பிள்ளைகளில் விருத்தி செய்ய வேண்டும். பெரும்பாலும் பெற்றோர்கள் கட்டுப்பாடுகளைப் பிள்ளைகளுக்கு விதிக்கிறார்கள். அதற்காகப் பல அழுத்தங்களையும் நெருக்குதல்களையும் மேற்கொள்கிறார்கள். எப்பொழுது கட்டுப் பாடுகளை மீறலாம் என்று எதிர்பார்த்துப் பிள்ளைகள் வளர்க்கிறார்கள். இந்த நிலைமை நன்மையைத் தராது. பெற்றோர்கள் பிள்ளைகள், சுயமாகக் கடடுப்பாடுகளை விருத்தி செய்யக் கூடிய தகுந்த சூழலைக் கட்டியெழுப்ப வேண்டும். தாமும் கட்டுப்பாட்டோடு முன் மாதிரியாக நடந்து காட்ட வேண்டும். கட்டுப்பாடுகளை மீறாமல் அளவாக வாழ்கின்ற பெற்றோர்களின் வாழ்க்கையைப் பிள்ளைகள் கண்குளிரப் பார்க்க வேண்டும். அத்தகைய ஒழுங்கும் கட்டுப்பாடும் நிறைந்த சீரிய வாழ்க்கையால் பெற்றுக் கொள்ளப்படுகின்ற சிறந்த நற்பண்புகளைக் கண்டு தாமும் அத்தகைய கட்டுப்பாட்டினை வளர்த்துக் கொள்ள விரும்புவார்கள். தாமாகவே விரும்பி ஏற்று வளர்த்துக் கொள்கின்ற சுயகட்டுப்பாடு பிள்ளைகளில் வாழ்நாள் முழுவதும் நீடிக்கும். சுய கட்டுப்பாடு வாழ்நாட் கட்டுப்பாடாக விளங்குவதால், வாழ்க்கை நலம் பெறும்.*

1. *சிறு வயதிலிருந்து பிள்ளைகளிடம் விருத்தி செய்ய வேண்டிய பண்பு எதுவெனக் கட்டுரை ஆசிரியர் கூறுகின்றார்?*
2. *பெற்றோர் பிள்ளைகள் மீது கட்டுப்பாடுகளை விதிப்பதால் ஏற்படும் விளைவு யாது?*
3. *பிள்ளைகள் சுயமாகக் கட்டுப்பாடுகளை விருத்தி செய்யப் பெற்றோர் செய்ய வேண்டியவை எவை?*
4. *வாழ்க்கை எப்பொழுது நலம் பெறும்?*
5. *வாழ்நாள் முழுதும் நீடித்து நிற்கும் சுயகட்டுப்பாடு எது?*

*(5 x 2 = 10 புள்ளிகள்)*

**05.** *பொலித்தீன் பாவனை இன்று மிக வேகமாக அதிகரித்து வருகிறது. அதனால் சூழல் மாசடைகின்றது. அதனை மீள்சுழற்சி செய்வது அழிப்பது என்பவை சவாலான விடயங்களாக உள்ளன. ஆகவே பொலித்தீன் பாவனையை குறைத்துக் கொள்வது தொடர்பில் பொதுமக்களிடத்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 100 சொற்களில் ஒரு துண்டுப்பிரசுரம் எழுதுக*

*அல்லது*

*உமது பாடசாலையின் தமிழிலக்கிய மன்றத் தலைவர் என்று உம்மைக் கருதிக்கொண்டு உமது பாடசாலையில் நடக்கவிருக்கும் முத்தமிழ் விழாவிற்கு தமிழ்ப் பேராசிரியர் ஒருவரை பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கும்படி கேட்டு 100 செற்களில் ஒரு கடிதம் எழுதுக.*

*(15 புள்ளிகள்)*

The National e-Learning Portal for The General Education

# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்.
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2017

| தரம் : 10 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம் : 2.00 மணி |
|---|---|---|
| | பெயர் / சுட்டெண் ................................................ | |

## பகுதி - III

**ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

**1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6. 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.**

**01. சுருக்கமான விடை தருக.**

1) **"தேம்படு பனையின் திரள் பழத்தொரு விதை
வானுற ஓங்கி வளம் பெற வளரினும்"**

அ) இங்கு பனையின் இயல்பு யாது?
ஆ) தேம்படு என்பதன் பொருள் யாது?

2) **"மாகமடங்கலும் மால்விடையும் பொன்
னாகமும் நாகமும் நாண நடந்தார்"**

அ) இங்கு நடந்தவர் யார் எனப் பண்டிதமணி குறிப்பிடுகின்றார்?
ஆ) நாகம் எனக் குறிப்பிடப்படும் இரு வேறு பொருள்களும் எவை?

3) **"பூத்த ஜோதி வதனம் திரும்புமேல்
புலனழிந்தொரு புத்துயிரெய்துவேன்"**

அ) இவ்வடிகளில் இடம்பெறும் உணர்வு யாது?
ஆ) ஐம்புலன்கள் யாவை?

4) **"கொங்கர்க் கமரர் பதியளித்த கோவே"**

அ) இங்கு யாருடைய சிறப்பு காட்டப்பட்டுள்ளது?
ஆ) "கோ" என்பதன் கருத்து யாது?

5) **"மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்"**

அ) இப் பாடலில் இடம்பெறும் அணி யாது?
ஆ) இப் பாடலைப் பாடிய புலவர் யார்?

6) **"ஆசைக்கிளியே ஆசியத்து உம்மாவே"**

அ) இப்பாடல் எப் பிரதேசத்துக்குரியது?
ஆ) இங்கு குறிப்பிடப்படும் தலைவியின் பெயர் யாது?

7) **"ஐய அன்பின் நிறைந்தாளை உரை"**

அ) இக் கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?
ஆ) அன்பின் நிறைந்தவள் யார்?

8) **"சினிமா மொழியைப் பல முறைகளில் வளமடையச் செய்யலாம்."**

அ) சினிமா மொழியின் அம்சங்கள் யாவை?
ஆ) சினிமாவை எதன் மூலம் வளமடையச் செய்யலாம்?

9) அ) கம்பியூட்டர் சிறுகதையை எழுதியவர் யார்?
ஆ) இச் சிறுகதை எத்தொகுப்பில் உள்ளது?

10) **"ஏர் தழைக்க வேணும் தம்பிரானே!
எல்லோரும் வாழ வேணும் தம்பிரானே!"**

அ) இங்கு தம்பிரான் என கூறப்படுபவர் யார்?
ஆ) இப் பாடலில் உழவனின் பரந்த நோக்கு எவ்வாறு புலப்படுகிறது?

(10 x 2 = 20 புள்ளிகள்)

**02. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

*1)*

**நைவீர லீர்மைந்தீ ரினித் துயரா**
**னாடிறந்து காடு நோக்கி**
**மெய்வீரர் பெயர்ந்ததுவு நலமாயிற்**
**றாமன்றே விலங்கற் றிண் டோட்**
**கைவீரக் களிறனைய காளையிவன்**
**றன்னோடு கலந்து நீங்க**
**ளைவீரு மொருவீரா யகலிடத்தை**
**நெடுங் கால மளித்தி ரென்றாள்.**

*அ) இப்பாடலில் குகனின் சிறப்பு எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?*

*ஆ) இங்கு ஐவீர் எனப்படுவோர் யாவர்?*

*2)*

**மாத மூன்று மழையுள்ள நாடு**
**வருஷ மூன்று விளைவுள்ள நாடு**
**வேத மூன்றும் பலாவுள்ள நாடு**
**விசேஷ மூன்றுங் குலாவுள்ள நாடு**
**போத மூன்று நலஞ்செயு நாடு**
**புவன மூன்று வலஞ் செயுநாடு**
**நாத மூன்றுரு வானகுற் றால**
**நாத ராரிய நாடெங்கள் நாடே.**

*அ) இப் பாடலில் குற்றால நாட்டின் சிறப்பு இரண்டு தருக?*

*ஆ) நாத மூன்றுருக்களும் எவை?*

*3)*

**ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்கவிற்கும்**
**கார் தட்டிய பஞ்ச காலத்திலே தங்கள் காரியப்பேர்**
**ஆர் தட்டினும் தட்டு வாராமலே அன்ன தானத்துக்கு**
**மார் தட்டிய துரைமால் சீதக் காதி வரோதயனே.**

*அ) பஞ்ச காலத்தின் தன்மை எவ்வாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது?*

*ஆ) சீதக்காதியின் கொடைத்தன்மை யாது?*

*4) இந்தச் சினிமா மொழியை, அதன் தன்மையை, தனித்துவத்தை உணர்ந்து, ஒரு படைப்பாளி அதை அழுத்தமாகக் கையாளும் போது, அங்கே நல்ல சினிமா பிறக்கிறது. இந்த மொழி யிலிருந்து மாறுபட்டு, வாய்ப் பேச்சினால் கதை சொல்ல முற்பட்டால் அங்கே சினிமா நலிவடைகிறது. பேசும் மொழி போலவே இந்த மொழியின் நயம் அதைப் பயன்படுத்தும் படைப்பாளியின் திறனை, கற்பனை வளத்தைப் பொறுத்தது. சூரியன் உதயமாவதைக் கண்டால் ஒருவன் 'ஓகோ விடிகிறது' எனலாம். கவிஞன் அதைக் கண்டாலோ "பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்" என்கிறான்.*

*அ) நல்ல சினிமா பிறப்பதும் நலிவடைவதும் எதனால்?*

*ஆ) "மொழியின் நயம் அதனைப் பிரயோகிப்பவனைப் பொறுத்தது" என்பதை கட்டுரை யாசிரியர் எவ்வாறு விபரிக்கிறார்?*

The National e-Learning Portal for The General Education

5) சமயங்களில் "அரவிந்தா! அரவிந்தா! இஞ்சே வா!" என்று யானை ஆதிமூலத்தைக் கூப்பிட்டது போல ஓலமிடுவாள் என் மனைவி. "கம்பியூட்டர் இந்தக் கூட்டலைத் தப்புத் தப்பாய்ப் போட்டிருக்கு இதை ஒருக்கா பார்" என்பாள். என்னுடைய மகனும் "என்னம்மா நீங்க சும்மா, சும்மா கூப்பிட்டு ரபிள் கொடுக்கிறீங்க என்று நடப்பு விட்டுக் கொண்டே போய் அந்தச் சில்லறைத் தகராறைச் சரிசெய்து விட்டு வருவான். இப்படியாக அந்தக் கணிப்பொறியின் வருகைக்குப் பிறகு எங்கள் வீடு ஒரு விஞ்ஞானத் துள்ளல் துள்ளி வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தது.

அ) கணிப்பொறி வருகையால் வீட்டில் ஏற்பட்ட மாற்றம் யாது?

ஆ) அரவிந்தனின் தாய் ஓலமிட்டதை ஆசிரியர் எதற்கு உவமித்துள்ளார்?

(5 x 4 = 20 புள்ளிகள்)

**03.** குற்றாலக் குறவஞ்சியை அடிப்படையாகக் கொண்டு,

அ) மலைவளம்

ஆ) குற்றாலநாதரின் சிறப்பு
என்பன எடுத்துரைக்கப்படுமாற்றினை விளக்குக.

**அல்லது**

பாரதியார் சுயசரிதையில்

அ) காதலி மீது கொண்ட காதல்

ஆ) விரும்பியவற்றை அடைய முடியாதவர்களின் இயல்புகள்

இ) விரும்பியவற்றை அடையாமற் போவதற்கான காரணங்கள்
என்பன எடுத்துக்காட்டப்படுமாற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

**04.** குகப்படலத்தில்

அ) கைகேயியின் கொடுந்தன்மைகள்.

ஆ) பரதன் குகனுக்கு கோசலையை அறிமுகம் செய்யும் விதம்.

இ) குகனின் குணாம்சங்கள்
புலப்படுத்தப்படுமாற்றை விபரிக்குக.

**அல்லது**

நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில்,

அ) நாவலர் சோர்வுற்றிருந்த நிலை

ஆ) நாவலர் வீறுடன் எழுந்த வேகம்

இ) சபையில் ஏற்பட்ட மாற்றம்
என்பன விபரிக்கப்படுமாற்றினை விளக்குக.

(15 புள்ளிகள்)

**5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.**

**05.** நீதிப்பாடல்களை அடிப்படையாகக் கொண்டு

அ) யானை அனையவர் நண்பு ஒரீஇ (நாலடியார்)

ஆ) அடக்கமுடையார் (வாக்குண்டாம்)
ஆகிய நீதிப்பாடல்கள் உணர்த்தும் அறக்கருத்துக்களை விளக்குக.

**06.** மீனவர் பாடல், காதல் பாடல் ஆகியவற்றில் காதல் கொண்ட தலைவனது காதல் உள்ளம் வெளிப்படுத்தப்படுமாற்றை விளக்குக.

**07.** காளமேகப் புலவரின் **"ஆடிக் குடத்தடையும்"** என்ற பாடலில் பாம்புக்குள் எள்ளுக்கும் இடையிலான பொருத்தப்பாடு பற்றி விளக்குக.

(10 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2017

**தரம் : 10** **தமிழ்மொழியும் இலக்கியமும்**

## விடைகள்

### பகுதி - I

| | | | | |
|---|---|---|---|---|
| 01) 2 | 02) 1 | 03) 3 | 04) 4 | 05) 4 |
| 06) 3 | 07) 1 | 08) 2 | 09) 1 | 10) 1 |
| 11) 4 | 12) 1 | 13) 3 | 14) 3 | 15) 3 |
| 16) 2 | 17) 3 | 18) 1 | 19) 3 | 20) 3 |
| 21) 3 | 22) 1 | 23) 3 | 24) 1 | 25) 2 |
| 26) 4 | 27) 4 | 28) 1 | 29) 3 | 30) 4 |
| 31) 2 | 32) 3 | 33) 1 | 34) 1 | 35) 1 |
| 36) 3 | 37) 1 | 38) 2 | 39) 1 | 40) 2 |

### பகுதி - II

**01.** 1) அறம் + தானே + என்கின்ற + அயல் + நின்றான் + தனை + நோக்கி

2) உடு – நட்சத்திரம் (பெயர்)
உடுத்தல் (வினை)

3) வர்ணனைகள், அணிகளைப் பயன்படுத்தல், கூறியது கூறல்

4) சரளமாகப் பேசும் திறன்.
தொழினுட்ப சாதனங்களைக் கையாளும் திறன்.

5) மாணவர்களுக்கான நவீனமயப்படுத்தப்பட்ட நூலகம் அதிக பயனளிப்பதாக இருந்தது.

6) ஐயா, சாப்பாடு முடிவடைந்து ஆறுதலாக இருக்கும் போது கேட்க வேண்டும்.

7) கபிலர் பாரியைப் புகழ்ந்து பல பரிசுகள் பெற்று மகிழ்ச்சியோடு வீட்டுக்குச் சென்றார்.

8) உருவகம் நல்ல நூலாகிய கடல்

9) திட்டவட்டமாக

10) யாவருக்கும் வசப்படுபவன் / சூதறியாதவன்

**02.**

| | | |
|---|---|---|
| பொருளமைவும் அளவும் | – | 12 |
| கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும் | – | 06 |
| எழுத்து நுட்பங்கள் | – | 05 |
| தலையங்கம் | – | 02 |
| | | 25 புள்ளிகள் |

**03.**
* அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியால் உலகம் சுருங்கி விட்டது.
* தகவல் மற்றும் கணினிப் பொறித் தொழில் நுட்பம் ஆகிய இரண்டும் இணைந்தே இணையம் உருவாகியது.
* இணைய வலையமைப்பினூடாக அதிக தகவல்கள் பெறப்படுகின்றன.
* ஆரம்பத்தில் அஞ்சல் செய்திகளை அனுப்ப மட்டுமே பயன்படுத்தப்பட்ட இணையம் இன்று பல்வகையில் பயன்படுகிறது.
* இணையப் பயனாளிகளின் எண்ணிக்கை எதிர்காலத்தில் அதிகரித்துச் செல்லும்.
* எனவே எதிர்காலத்தில் இணையத்தின் பயன்கள் பற்றிய ஆய்வு அவசியமாகும்.

**04.** 1) சுயகட்டுப்பாடு
2) கட்டுப்பாடுகளை மீறலாம் என எதிர்பார்த்து வளர்கிறார்கள்.
3) தகுந்த சூழலை கட்டியெழுப்ப வேண்டும், தாமும் முன்மாதிரி நடக்க வேண்டும்.
4) சுயகட்டுப்பாடு வாழ்நாட் கட்டுப்பாடாக விளங்குவதால்.
5) தாமாகவே விரும்பி ஏற்று வளர்த்துக்கொள்கின்ற சுயகட்டுப்பாடு.

**05.** துண்டுப்பிரசுரம் / கடிதம்

| | | |
|---|---|---|
| அமைப்பு | – | 04 |
| உள்ளடக்கம் | – | 08 |
| மொழிநடை | – | 03 |
| | | 15 புள்ளிகள் |

## பகுதி - III

**01.** *1)* அ) பெரிய விதையில் இருந்து முளைத்து உயரமாக வளர்ந்திருத்தல்.
ஆ) இனிமை நிறைந்த

*2)* அ) நாவலர்
ஆ) நாகம் – மேருமலை
– களிற்றுயானை / ஆண்யானை

*3)* அ) காதல்
ஆ) சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்

*4)* அ) சோழன்
ஆ) மன்னன் / அரசன்

*5)* அ) உயர்வுநவிற்சி
ஆ) திரிகூடராசப்பகவிராயர்

*6)* அ) கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களுக்குரியது.
ஆ) ஆசியத்து உம்மா

*7)* அ) குகனால் பரதனுக்கு
ஆ) சுமித்திரை

*8)* அ) காட்சிப்படிமம், ஒலி, படத்தொகுப்பு
ஆ) குறியீடு

*9)* அ) அ. முத்துலிங்கம்
ஆ) வடக்கு வீதி

*10)* அ) சிவபெருமான்
ஆ) எல்லோரும் வாழ வேண்டும் எனக் குறிப்பிடுவதன் மூலம்

**02.** *1)* அ) மலை போன்ற திரண்ட தோள்களை உடையவன்.
துதிக்கையால் செய்யும் வீரச்செயலுடைய ஆண் யானையை ஒத்தவன்.
ஆ) இராமன், இலக்குமணன், பரதன், சத்துருக்கன், குகன்

*2)* அ) மாதம் மூன்றும் மழையுள்ள நாடு
வருடம் மூன்று விளைவுள்ள நாடு
வேதம் மூன்றும் பலாவுள்ள நாடு
விசேஷம் மூன்றும் குலாவுள்ள நாடு
ஆ) அரி, அயன், அரன்

*3)* அ) பொன்னுக்கு நெல்லை தராசில் போட்டு சமமாக விற்கும் கொடிய பஞ்ச காலம்.
ஆ) இரப்பவன் வீட்டுக் கதவைத் தட்டிய போது இரப்பவரின் தட்டு நீட்டப்படு முன்னரே அன்னம் வழங்கும் கொடைத் தன்மை உடையவன்.

*4)* அ) சினிமா மொழியை உணர்ந்து அதனை அழுத்தமாகக் கையாளும் போது நல்ல சினிமா பிறக்கிறது.
வாய்ப் பேச்சினால் கதை சொல்ல முற்பட்டால் சினிமா நலிவடைகிறது.
ஆ) சூரிய உதயத்தைச் சாதாரண ஒருவன் விபரிப்பதற்கும் கவிஞன் விபரிப்பதற்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துக் காட்டுவதன் மூலம்

*5)* அ) வீடு ஒரு விஞ்ஞானத் துள்ளல் துள்ளி வேகமாக முன்னேறியது.
ஆ) யானை ஆதிமூலத்தை ஓலமிட்டு அழைப்பதற்கு உவமித்துள்ளார்.

The national e-learning Portal for the General Education

**03.** அ) வானரங்கள் கனிகொடுத்து.......
முழங்குதிரை புனலருவி...
பாடல் விளக்கம்

ஆ) வளைந்த இளம் பிறைச் சந்திரனை சடாமுடியில் அணிந்த அழகுமிக்கவர்.
கொடைத் தன்மை மிக்கவர்.
நாத தத்துவத்தின் பொருள்
குறும்பலாவின் அடியில் கோயில் கொண்டவர்.

அல்லது

அ) நீரெடுத்து வர அவள் மணி..........
காத்திருந்து அவள் போம்........
பாடல் விளக்கம்

ஆ) விதியை நோவர் தம் நண்பரைத் தூற்றுவர்...........
பாடல் விளக்கம்

இ) தாழ்ந்த உள்ளத்தவர், சோர்வினர், ஆடுபோல பல பொருள் நாடுவோர், வீழும் இடையூற்றுக்கு அஞ்சுவோர் (விளக்குதல்)

**04.** அ) சுடுமயானத்திடை தன் துணை ஏக..........
படர் எலாம் படைத்தாளை.......
விளக்கப்பட வேண்டும்.........

ஆ) சுற்றத்தார் தேவரொடும்...........
விளக்கப்படல் வேண்டும்.

இ) பரதனிடம் அன்பு செலுத்தியவன்.
கோசலை மீது அன்பு செலுத்தியவன்.
கோசலை வாயால் புகழப் பெற்றவன்.
கைகேயியின் கொடுந்தன்மை அறிந்தும் தாயாகக் கருதி வணங்கியவன்.

அல்லது

அ) வண்ணர்பண்ணை சைவப்பிரகாச வித்தியசாலை மண்டபத்தில் துணுக்கு அருகில் இருந்த நிலை – விளக்கல்

ஆ) பொழிந்தநெய் ஆகுதி..........
மாகமடங்கலும்.............................. விளக்கல்
பண்டிதமணியின் ஏக்கம் கம்பர் இல்லை என வருத்தப்படல்.

இ) நாவலர் மேடைக்கு வந்ததும் பிறிற்றோ கட்சியினர் நிலை விளக்கல்.

**05.** அ) யானை அனையவர்................

அ) அடக்கமுடையார்..........
நீதிக்கருத்துக்களை விளக்குதல்.

**06.** * ஒவ்வொன்றை நம்பி ஒவ்வொன்று இருப்பது போல உன்னை நம்பி நான் இருக்கிறேன் உனக்காக கஸ்ரப்படுகிறேன். விளக்குதல் வேண்டும்.
காதல் பாடல் பலவாறு காதலியை விளித்தல் அடையாவிட்டால் மயானம் செல்வதாகக் கூறல்.
இயற்கைகளை நிலைநிறுத்தல் – விளக்குதல் வேண்டும்.

**07.** ஆடிக்குடத்தடையும் என்ற பாடல் சிலேடை விளக்கம்.

The National e-learning Portal for The General Education